

# தூய லூர்து அன்னைக்கு நவநாள் செபம்

(முதலில் செபமாலையும், வாழ்க அரசியே செபமும் சொல்ல வேண்டும்)

## மன்றாட்டு மாலை:

முத : ஆண்டவரே இரக்கமாயிரும்...
எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.
முத : கிறிஸ்துவே இரக்கமாயிரும்...
எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
முத : ஆண்டவரே இரக்கமாயிரும்...
எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.
முத : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்...
எல் : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கனிவாய்க் கேட்டருளும்.

முத : விண்ணகத் தந்தையாகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.
முத : உலகை மீட்டத் திருமகனாகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.
முத : தூய ஆவியாராகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.
முத : மூவொரு கடவுளாகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

(உங்கள் பதில்: எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.)

முத : உலக மீட்பரை எங்களுக்கு அளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : பிறப்பு நிலைப் பாவமின்றி உற்பவித்தத் தூய லூர்து அன்னையே...
முத : இறை இரக்கத்தை அதிசயிக்கும் விதத்தில் பெற்றத் தூய லூர்து அன்னையே...
முத : லூர்து நகரின் கெபியில் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : உலக மாயையை வெறுத்தல் அவசியம் என்று காட்ட ஏகாந்த இடத்தில் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : விண்ணகத்தின் மாட்சியைக் காட்டப் பூங்கதிர்கள் அணிந்த உடலோடு காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : ஞானத்திற்கு மேலான செல்வம் ஒன்றுமில்லை என்று காட்ட அழகின் அவதாரமாகக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : ஆன்மத் தூய்மைக்கு மேலானத் தூய்மை ஒன்றுமில்லை என்று காட்ட வெண்ணாடை அணிந்துக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : கற்பு என்பது விண்ணகத்தாருக்கு உரியது என்று காட்ட மேகமற்ற வானம் போன்ற நீலக்கச்சை அணிந்துக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...
முத : கற்புக்குக் காவல் அடக்கவொடுக்கம் என்று காட்ட நெடுமுக்காடு அணிந்துக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: விண்ணக வாழ்வே நிலையானது என்று காட்ட வானத்தை நோக்கிக் கைகளைக் குவித்துச் செபித்தபடிக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: ஐம்பத்து மூன்று மணி செபத்தை அடிக்கடிச் சொல்வதே சிறந்த பக்தி முயற்சி என்று காட்டச் செபமாலையைக் கையிலேந்திக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: கல்லும் முள்ளும் நிறைந்த வனமாகிய இவ்வுலகில் இறைவன் மட்டுமே நமக்குத் துணை என்று காட்டக் கற்பாறையில் படர்ந்த ரோஜா மலரையும் முள்ளையும் தன் காலால் மிதித்தபடிக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: தாழ்ச்சியும் பிறரன்பும் கொண்டவர்கள் மேல் இறைவன் அன்பு கொண்டுள்ளார் என்று காட்ட ஏழைச் சிறுமியான பெர்னதத்திற்குக் காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: இறைவனை அன்பு செய்து அவர் மீது நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு அசாத்தியமானது ஒன்றுமில்லை என்று காட்ட ஏழைச் சிறுமியான பெர்னதத் வழியாக ஒரு நீரூற்றைப் பீரிடச் செய்து காட்சியளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: இறைவனின் வல்லமையையும் அருளையும் அளவிட்டுச் சொல்ல முடியாது என்று காட்ட அந்த நீரூற்றைத் தாராளமாகச் சுரந்து வழிந்தோடி, எண்ணற்ற நோயாளிகளுக்கு உடல் நலச் சுகமளித்தத் தூய லூர்து அன்னையே...

முத: அனைத்து அன்னையர்களின் முன்மாதிரியானத் தூய லூர்து அன்னையே...

முத: 'நானே அமல உற்பவம்' என்றத் தூய லூர்து அன்னையே...

முத: நம்பிக்கையின் விண்மீனானத் தூய லூர்து அன்னையே...

முத: பாவிகளை நல்வழிக்குத் திருப்புகின்றத் தூய லூர்து அன்னையே...

முத: நீதிமான்களை திடப்படுத்துகின்றத் தூய லூர்து அன்னையே...

முத: இறந்தோருக்கு உயிரளிக்கும் தூய லூர்து அன்னையே...

முத: பார்வையற்றோருக்குப் பார்வை அளிக்கின்றத் தூய லூர்து அன்னையே...

முத: காது கேளாதோருக்குக் கேட்கும் திறன் தருகின்றத் தூய லூர்து அன்னையே...

முத: முடவர்களை நடக்கச் செய்கின்றத் தூய லூர்து அன்னையே...

முத: நோயாளிகளைக் குணப்படுத்துகின்றத் தூய லூர்து அன்னையே...

முத: துன்பப்படுபவர்களைத் தேற்றுகின்றத் தூய லூர்து அன்னையே...

முத: அவசர வேளைகளில் துணையாக இருக்கின்றத் தூய லூர்து அன்னையே...

முத: மேன்மேலும் பரிந்துரை நாடப்படுகின்றத் தூய லூர்து அன்னையே...

முத: லூர்து நகரின் திருத்தலத்திற்கு கணக்கற்ற மக்களை ஈர்க்கும் தூய லூர்து அன்னையே...

முத: எங்கள் தாய்த் திருஅவைக்காக உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: எங்கள் திருத்தந்தைக்காகவும் ஆயர்களுக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: எங்கள் அருள்பணியாளர்களுக்குத் திடனளிக்க உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: எங்கள் பாவங்களின் தண்டனைகளுக்காக உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: எங்களுக்காகவும், எங்களது பிள்ளைகள், பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: எங்களது எதிரிகளுக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: பாவிகள், அவிசுவாசிகள், மனநோயாளிகள் அனைவருக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: உத்தரிக்கும் தலத்து ஆன்மாக்களுக்காகவும், இறந்தோர் அனைவருக்காகவும் உம்மை மன்றாடுகின்றோம் தூய லூர்து அன்னையே...

முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல்: எங்கள் பாவங்களைப் மன்னித்தருளும்.
முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல்: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
முத: உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத: செபிப்போமாக! எல்லாம் வல்ல இறைவா! முழு மனதோடு தொண்டனிட்டு விழுந்து கிடக்கும் எங்களையும், எங்கள் குடும்பத்தையும் கண்ணோக்கி, எப்பொழுதும் கன்னியான அமலோற்பவ லூர்து அன்னையின் பரிந்துரையினால், நாங்கள் பாவ வழியை விட்டு விலகி, உமது வழியைப் பின்பற்றி, உமது திருவுளப்படிப் நிலையான விண்ணக வாழ்வுக்கு வந்தடைய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.
எல்: ஆமென்.

## நவநாள் செபம்:

ஓ மாசற்றக் கன்னி மரியே, எளியோரின் அன்னையே, இரக்கத்தின் தாயே, நோயுற்றோரின் ஆரோக்கியமே, பாவிகளின் அடைக்கலமே, துன்புறுவோருக்குத் தேற்றரவே, எங்கள் தேவைகள், பிரச்சனைகள், துன்பங்கள் அனைத்தையும் அறிந்தவர் நீரே. உமது கருணைக் கண்களை எங்கள் மீது திருப்பியருளும். லூர்து நகரில் காட்சியளித்து, அதை உமது திருத்தலமாக மாற்றி, அதன் மூலம் எங்கள் தேவைகள் நிறைவேறவும், உடலும் உள்ளமும் நலம் பெறவும், உடல் நோய்கள் குணமடையவும் பரிந்துரை செய்தீரே, அதற்காக நன்றி அம்மா. அதே நம்பிக்கையால் ஏவப்பட்டு, இதோ மீண்டும் உமது திருப்பாதத்தை அண்டி வந்திருக்கிறேன். அன்பு அன்னையே, நான் இப்போது இறைஞ்சிக் கேட்கும் என் மன்றாட்டுகளைப் புறக்கணியாமல், இறைவனின் திருவுளப்படி, தயாபரியாய் பரிந்து பேசி அடைந்து தந்தருளும்.

(உங்கள் மன்றாட்டுகளை இப்போது மௌனமாக நினைவு கூறுங்கள்)

இறைவனின் அன்னையே, உமது பரிந்துரையால் நீர் பெற்றுத் தந்த அனைத்து வரங்களுக்கும் நன்றியறிதலாகவும், பரிகாரமாகவும், நாங்கள் தொடர்ந்து உமது நற்பண்புகளைப் போற்றிப் பின்பற்றி, உம் திருமகனின் திருப்பெயர் மகிமையடைய, அவர் காட்டிய வழிகளில் நடப்போம் என உறுதி அளிக்கிறோம். ஆமென்.

## முதல் நாள் செபம்:

ஓ மாசற்ற மாமரியே, லூர்து அன்னையே, எங்கள் தாயும் கன்னியுமானவரே, விண்ணக அரசியே, என்றென்றும் நிலையான வார்த்தைக்குத் தாயாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே, இதன் காரணமாகப் பாவங்களிலிருந்துப் பாதுகாக்கப்பட்டவரே, புனித பெர்னதத்தைப் போலவே நாங்களும் உம் முன் தாள்பணிந்து, லூர்து நகரில் உமது மாட்சிமிக்கத் தோற்றத்தை நாங்கள் நினைவு கூர்கின்றோம். எங்களது இன்றைய விண்ணப்பங்களை இரக்கத்தோடு ஏற்று, ஒரு சாதகமானப் பதிலை எங்களுக்குத் தந்தருள்வீர் என்று உம் மீது நாங்கள் ஒரு குழந்தைத்தனமான நம்பிக்கையுடன் மன்றாடுகின்றோம்.

உமது விண்ணேற்பினால் மாட்சிமை பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 2ம் நாள் செபம்:

தூய கன்னி மரியே, 'நானே அமல உற்பவம்' என்று லூர்து நகரின் கெபியில் புனித பெர்னதத்திடம் பிரகாசமான ஒளியில் உம்மையே வெளிப்படுத்திப் பேறுபெற்ற ஓ மாசற்றே மாமரியே, உமது மாசற்றத் தூய இதயத்தில் சுடர்விட்டு எரியும் அன்பின் கதிரால் எங்கள் இதயங்களையும் எரியச் செய்து, உம்மையும் இயேசுவையும் நாங்கள் அதிகமாக அன்பு செய்து, மாட்சிமிக்க நிலைவாழ்வை நாங்களும் ஒரு நாள் அடையத் தகுதி பெறச் செய்தருளும். இறையருளை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பவரே, இன்று இந்த நவநாள் வழியாக நாங்கள் மன்றாடிய விண்ணப்பங்கள் அனைத்தையும் உமது தெய்வீகத் திருமகனிடம் கொண்டு சேர்த்தருளும்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 3ம் நாள் செபம்:

'ஓ மரியே, நீர் நேர்மையானவர், உம்மிடம் தொடக்க நிலைப் பாவத்தின் கறைகள் ஏதுமில்லை. 'ஓ மரியே, பாவமின்றி உற்பவித்தவரே, உம்மை நாடி வரும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். தூய்மையானப் பிரகாசிக்கும் விண்மீனே, அந்த அருமையான நாளில், லூர்து நகரின் கரடுமுரடானப் பாறையின் மீது, சிறுமியான பெர்னதத்திடம் நீர் பேசி, பூமியிலிருந்து ஒரு நீரூற்று பீரிட்டெழுந்து, அற்புதங்கள் பல நிகழ்ந்து, லூர்து பேராலயம் தொடங்கியது. எனவே, இன்றைய எங்களது விண்ணப்பங்களை நீர் நிறைவேற்றும்படி உம்மைத் தாழ்மையோடும் உருக்கத்தோடும் மன்றாடுகிறோம்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 4ம் நாள் செபம்:

ஓ மாசற்ற விண்ணக அரசியே, வழிதவறிப் பாவம் செய்யும் உமது பிள்ளைகளாகிய நாங்கள், வானதூதர்களோடு அனைத்துப் புனிதர்களோடும் இணைந்து, என்றும் பிரிக்க முடியாதத் தூய மூவொரு இறைவனின் திருப்பெயர் விண்ணிலும் மண்ணிலும் மகிமைப் படுத்தப்பட வேண்டும் என்று நன்றியோடு மன்றாடும் எங்கள் தகுதியற்ற செபத்தோடு நீங்களும் இணையும்படி மன்றாடுகிறோம். தூய லூர்து அன்னையே, அற்புதக் கெபியில் செபித்த பெர்னதத்திற்கு நீர் அன்போடும் இரக்கத்தோடும் செவிமடுத்தது போல எங்கள் மீதும் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். ஓ இனிய இறைவனின் தாயே, உமது தெய்வத் திருமகன் உமக்கு வழங்கிய தாராள அருள் கொடைகளிலிருந்து, எங்களுக்குத் தேவை என்று உமது தாய்மை உள்ளம் அறிந்தவற்றையும், இன்று இந்த நவநாள் வழியாக நாங்கள் மன்றாடிய விண்ணப்பங்களையும் எங்களுக்குப் பெற்றுத் தந்தருளும்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 5ம் நாள் செபம்:

ஓ மாசற்ற மரியே, இறைவனின் தாயும் எங்கள் தாயுமானவரே, உமது கண்ணியத்தின் உச்சத்திலிருந்து எங்களை இரக்கத்துடன் கண்ணோக்கியருளும். நாங்கள் உமது அளவற்ற நற்குணத்தின் மீது முழு நம்பிக்கை வைத்து, நீர் பரிந்து பேசும் போது உமது தெய்வத் திருமகன் சாதகமாகப் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையில், நாங்கள் இந்த நவநாள் வழியாக மன்றாடிய விண்ணப்பங்களைப் பரிந்து பேசி அடைந்து தந்தருளும்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 6ம் நாள் செபம்:

தூய லூர்து அன்னை என்ற சிறப்புடன் மிகவும் வல்லமையுள்ள மாட்சியுடன் விளங்கும் இறைவனின் அன்னையே, எங்கள் ஆன்மீக நலனுக்காகவும் உடல் நலனுக்காகவும் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் அருளையும் இரக்கமுள்ள இயேசுவின் இதயத்திலிருந்துப் பெற்றுத் தர உமது வல்லமைமிக்கப் பரிந்துரையை வேண்டி, நாங்கள் எங்கள் இதயத்தையும் கைகளையும் உம்மை நோக்கி உயர்த்தி, இன்று இந்த நவநாள் வழியாக நாங்கள் மன்றாடிய அனைத்து விண்ணப்பங்களையும் உமது தெய்வீகத் திருமகனிடம் பரிந்து பேசி அடைந்து தந்தருளும்.

புனித பெர்னதத்தின் அன்னையே, உமது தலைமுடியில் வானத்தின் விண்மீன்களையும், உமது காலடியில் பூமியின் ரோஜா மலர்களையும் கொண்ட நீர், அன்று லூர்து நகரின் கெபியில் மன்றாடிய பெர்னதத்தை இரக்கத்துடன் கண்ணோக்கியது போல எங்கள் மீதும் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 7ம் நாள் செபம்:

எல்லாம் வல்ல இறைவா, மாசற்றத் தூய கன்னி மரியாவின் கருவறையை உமது திருமகனுக்குத் தகுதியான இருப்பிடமாகத் தயாரித்தீர். லூர்து நகரின் கெபியில் அந்த அன்னை அளித்தக் காட்சியை சிந்திக்கும் எங்களுக்கு ஆரோக்கியமான உடலையும் உள்ளத்தையும் அருள உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம். ஓ அருள்மிகப் பெற்ற அன்னை மரியே, எங்கள் ஆண்டவரும் மீட்பருமான இயேசுவின் அன்பு அன்னையே, அன்று லூர்து நகரின் கெபியில் மன்றாடிய பெர்னதத்தை நீர் இரக்கத்துடன் கண்ணோக்கியது போல, இன்று இந்த நவநாள் வழியாக நாங்கள் மன்றாடிய விண்ணப்பங்களை உமது தெய்வீகத் திருமகனிடம் பரிந்து பேசி அடைந்து தந்தருளும்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 8ம் நாள் செபம்:

ஓ மாசற்ற இறைவனின் அன்னையே, நீர் விண்ணகத்திலிருந்தே கரடுமுரடான லூர்து நகரின் கெபியில் சின்னஞ்சிறு பெர்னதத்திற்குத் காட்சியளித்தீர். பெர்னதத் உமது காலடியில் மண்டியிட்டதும் அதிசய நீரூற்று பீரிட்டு, திரளான மக்களை வரவழைத்து உமது ஆலயத்தின் முன் மண்டியிட வைத்தது போல, ஓ இறைவனின் தாயே, உமது இரக்கத்தால் உமது தெய்வீகத் திருமகனிடம், இன்று இந்த நவநாள் வழியாக நாங்கள் மன்றாடிய விண்ணப்பங்களை பரிந்து பேசி அடைந்து தந்தருளும்படி உம் முன் நாங்களும் மண்டியிட்டுள்ளோம்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## 9ம் நாள் செபம்:

இறைவனின் மாட்சியுள்ள அன்னையே, எங்கள் ஆன்மீக நலனுக்காகவும் உடல் நலனுக்காகவும், குறிப்பாக மகிழ்ச்சியான இறப்பிற்குத் தேவையான அனைத்து அருளையும் இரக்கமுள்ள இயேசுவின் இதயத்திலிருந்துப் பெற்றுத் தர உமது வல்லமைமிக்கப் பரிந்துரையை வேண்டி, நாங்கள் எங்கள் இதயத்தையும் கைகளையும் உம்மை நோக்கி உயர்த்துகிறோம். எங்கள் தெய்வீக இறைவனின் தாயே, எங்களது விண்ணப்பங்களை உமது பாதத்தில் சமர்ப்பித்து இன்று இந்த நவநாளை முடிக்கிறோம்.

உமது பரிந்துரையால் எங்களது விண்ணப்பங்கள் அருளுடன் நிறைவேறும் என்ற நம்பிக்கையை நாங்கள் உணர்கிறோம். எங்கள் ஆண்டவரின் அன்னையே, இயேசு கிறிஸ்துவின் மீது நீர் வைத்திருக்கும் அன்பாலும், அவருடையத் திருப்பெயரின் மாட்சிமைக்காகவும், எங்களுக்காக மன்றாடி, எங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுத் தந்தருளும்.

உமது விண்ணேற்பினால் மாட்சி பெற்றவரே, மணிமுடி சூடி வெற்றி பெற்றவரே, இறைவனின் தாயே, கன்னி மரியே, விண்ணக அரசியே, எங்கள் தாயே, நீர் எங்களது ஆறுதலாகவும், நம்பிக்கையாகவும், வலிமையாகவும் இருந்து, எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

தூய லூர்து அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித பெர்னதத்தே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(புனித பெர்னார்டின் செபத்தைச் சொல்லி நிறைவு செய்யவும். விரும்பினால் நமது திருத்தந்தையின் கருத்துகளுக்காகவும் நமது பங்கின் கருத்துகளுக்காகவும் சிறப்பாக மன்றாடலாம்.)